யாழ்ப்பாணம் - மூளாய் வாசியும்

கடமை வீரனும், கண்ணியவானும்
உலகோர் போற்றும் உத்தமன்

உயர்திரு அமரர்

# அப்பாக்குட்டி கந்தசாமி

(ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

அவர்களின்


மறைவையொட்டி வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

24-09-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் அப்பாக்குட்டி கந்தசாமி

## அவர்கள்

தோற்றம்
31-12-1927

மறைவு
26-08-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு அப்பாக்குட்டி கந்தசாமி அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

வளமும் வனப்பும் நிறைந்த மாண்புமிகு மானிப்பாயில் 1927ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதி (31-12-1927) திரு விஞசித்தம்பி அப்பாக்குட்டி அவர்கட்கும் மனைவியார் பொன்னுப்பிள்ளை அவர்களுக்கும் கனிஷ்ட புதல்வனுக திரு கந்தசாமி பிறந்தார். தருமலிங்கம் என்னும் மூத்தசகோதரனேடு அன்பாக வாழ்ந்தார்.

இவர் தனது குழந்தைப்பருவத்தில் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியை ஆரம்பித்தார். பின்னர் மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் கல்வி பயின்ருர். பின்னர் சுன்னுகத்தில் இருக்கின்ற விற்பனைத் திணைக்களத்தில் சேர்ந்து தனது ஆரம்ப உத்தியோகத்தை தொடங்கி சிறந்த முறையில் கடமையை செய்ததனுல் பளாலியிலுள்ள பண்டகசாலைக்கு களஞ்சியக்காப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார்.

இவ்வேளையில் ஆசிரியமணியென அனைவராலும் புகழப்பட்ட ஆசிரியர் திரு கந்தையா ஆசிரியை திருமதி அன்னபூரணம் ஆகியோரின் சிரேஸ்ட புதல்வி கைலேநாயகியை திருமணம் புரிந்தார். குடும்ப வாழ்வினில் இவர்களுக்கு தயாபரன், முரளீதரன், திருபாகரன் சுதாகரன் என்கின்ற நான்கு ஆண்பிள்ளைகளும் சுகந்தி (சுமதி) என்கின்ற ஒரு பெண்பிள்ளையும் பிறந்தார்கள்.

பிள்ளைகள் கல்விகற்று வளர்ந்துவரும் வேளையில் திரு. கந்தசாமி அவர்கள் பதவி உயர்வுகள் பலபெற்று நாட்டின் பலபாகங்களுக்கும் பல திணைக்களங்களுக்கும் மாற்றலாகிச் சென்று திறம்பட சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தார். இறுதியில் புத்தூரிலுள்ள உரக்கூட்டுத்தாபனத்துக்கு மாற்றலாகிச் சென்று சேவைபுரிகையில் தனதுவாழ்வினில் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் செய்த பலவருட சேவையிலிருந்தும் ஓய்வுபெற்றார்.

அவர் சேவையிலிருந்து இளைப்பாறி மூன்று ஆண்டுகள் கடந்து செல்கையிலே ஆண்டவன் அவரின் வாழ்வின் கணக்கை முடித்துக் கொண்டான். அதனால் அந்த உத்தமனின் சடுதிமறைவு மூளாய் மக்களுக்கு மட்டுமன்றி அவரை அறிந்த எல்லோர்க்கும் பேரதிர்ச்சியும் இழப்புமாகும்

இந்த உத்தமனின் வரலாறு இவ்வாறு அமைந்தது அவரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்

## பிள்ளைகள்

எங்களுக்கு வாழ்வளித்த அன்பான அப்பாவே
தப்பாக எதையும் நாம் செய்ததில்லை இப்போதும்
எம்மைவிட்டு எங்குசென்றீர் எமக்கிங்கு யாருதவி
அன்னையும் தந்தையும் நீர்தானே எங்குற்றீர்

## மனைவி

வாழ்வின் ஒளிவிளக்காய் வந்துற்ற மன்னவரே
தாழ்வொன்று மில்லாமல் சகல செல்வமும் பெற்றே
எம்மக்கட் செல்வங்களின் மழலை மொழிகேட்டு
சீருடனே வாழ்ந்தோம் தெய்வத் திருவருளால்
கண்ணூறு பட்டதுபோல் கருமேகம் சூழ்ந்ததுவே
எண்ணிய இல்லையே இக்கதிதான் வருமென்று
வாடியே சோருகின்றேன் நீர் போனவழி தெரியாமல்
இடையிலே மின்னுமல் இடிஇடிக்க தென்னசெய்வேன்:

## அண்ணன் தருமலிங்கம்

சோடிழந்த அன்றிலைப்போல் துயரமானேன்
    தோகைமயில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானேன்
காடுகளில் இணைபிரிந்த கலைகளானேன்
    கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானேன்
ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானேன்
    எனக்குற்ற துணைஇழந்து பித்தனானேன்
பாடுபட நானறியேன் தம்பி கந்தா
    உன் ஆத்மா சாத்திபெற வேண்டுகின்றேன்
என் துயர் நீங்க வழிவகுத்து இரட்சிப்பாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணி

வளரும் பயிராய் நான்வரும் வேளையிலே
முன்வந்த என்னை அன்னை என அனுசரித்து
அன்று தொட்டு இறக்கும் வரை
ஆதரித்த மைத்துனரே
ஏங்கவைத்து என்னே இறைவனடி சேர்ந்தனையே,

## பெருமக்கள்

எங்களிடத் தன்புடைய இனிய சித்தப்பாவே
தங்கம் எனத்திகழும் தணியாத ஒளிவிளக்கே
பொங்கி வரும் எம்துயரை போக்கும் அருள்மணியே
தாங்க வொண்ணாத் துயரில் தவிக்கவிட்டுச் சென்றீரே.

## மாமி

மகனில்லாக் குறை நீக்க மருமகனாய் வந்துதித்தீர்
எனக்கேதும் சொல்லாமல் இறையுலகம் சேர்ந்திட்டீர்
குறையேதும் விட்டதில்லை உம்மக்கள் முகம் கண்டு
நிறைகுடம்நீர் இடையில் என் குறைகுடமவர் தூக்க வைத்தீர்

## ஊர்மக்கள்

கந்தசாமி என்று சொல்லும் கருணைநிதி அவரன்றோ
கலையிலும் கல்வியிலும் களஞ்சியமே அவரன்றோ
உள்ளத்தில் வெள்ளையும் உதட்டிலே கண்டிப்பும்
கொண்டிட்டார் குறையேது கண்டிட்டார் எங்குசென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பண்புமிக்க எனது நண்பர்"

நண்பிற்கு ஓர் இலக்கணமாக வாழ்ந்த கர்மயோகி அப்பாக்குட்டி கந்தசாமி அவர்கள்.

அக்ஷய வருடம் ஆவணி மாதம் அபரபட்ச அஷ்டமி திதி அமைந்த 25-8-86இல் சிவபிராப்தி அடைந்தார்.

மானிப்பாய் வடக்கில் சங்குவேலி உடுவில் ஆகிய கிராமங்கள் சங்கமிக்கும் திரிசங்கமப் பதியில் உயர்வேளாள குலத்துத் தோன்றலான அப்பாக்குட்டி என்னும் பெரியாருக்கும் பொன்னுப்பிள்ளை அம்மையாருக்கும் கனிட்ட புத்திரராக உற்பவித்தார். உடுவில் தெற்கு முருகமூர்த்தி வித்தியாசாலையில் எம்முடன் சேர்ந்து ஆரம்பக்கல்வியைப் பயின்று பின் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தாய்மொழி, ஆங்கிலம், கணக்கியல் முதலியவற்றைப் பயின்று விற்பனைத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையேற்று, உத்தரவாத விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்திலும் நெல் சந்தைப்படுத்தும் பகுதியிலும், பொறுப்பதிகாரியாகவும் நிர்வாகியாகவும் கடமையாற்றி வருங்கால்; "இல்லறமல்லது நல்லறமில்லை" என்னும் பெருவாக்கிற்கிணங்க மூளாயைச் சேர்ந்த கயிலைநாயகி என்னும் பெண்ணை பந்துக்களதும் பெரியார்களினதும் விருப்பத்திற்கமைய‌த் திருமணஞ் செய்து வள்ளுவர் காட்டிய வழிநின்று, அன்புடைமை விருந்தோம்பல், நடுவுநிலைமை, செய்நன்றிஅறிதல், அடக்கம் ஒழுக்கம் பொறை உடைமை ஆதியாம் இல்லற தருமத்தை பேணிப் புத்திரர்கள் நால்வரையும் கண்ணின் மணிபோன்ற ஒரு புத்திரியையும் உலகிற்குத் தந்து சீரும் சிறப்புடனும் பேணிப் போற்றி வளர்த்து வந்தார்.

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப்படும்"

என்னும் பொய்யாமொழிக்கிணங்க தாம் மேற்கொண்ட இல்வாழ்வை முழுமையாக்கினார்.

திரு அப்பாக்குட்டி கந்தசாமி அவர்கள் எனது பாலியநண்பர் மாணவப் பராயத்தில் சந்தேகங்களுக்கு விடை காண்பதில் சிறந்த ஆசான். அரசாங்க சேவையில் எனக்குதவிய ஓர் சிறந்த எழுதுவினைஞர். உலகியலில் நல்ல ஓர் ஆலோசகர், ஆன்மீகத்துறையில் இணையற்ற ஞானி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் மறைவு அவருடைய குடும்பத்திற்கு ஈடு இணையற்ற பேரிழப்பாகும், எம் போன்றவர்க்கு பெரும் துக்க சம்பவம். ''எங்கள் நண்பன் கந்தசாமி போய்விட்டார்'' என்று கேட்டதும் அவரை இனி பார்க்க முடியாதே என்ற அதிர்ச்சியில் சிறிது நேரம் அசைவற்றநிலை.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு'' என்பது திருக்குறள்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக

சாந்தி சாந்தி சாந்தி

திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே.

இங்ஙனம்
**பிரம்மஸ்ரீ வாஞ்சீவரக் குருக்கள்**
**முத்துக்குமாரசாமி சர்மா**
மாவட்ட விற்பனை அதிகாரி
விற்பனைத் திணைக்களம் வடபிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கந்தசாமி அவர்கள்

# ஓர் விடுதலையின் முன்னோடி

பல்வேறு சிறப்புக்களையும் உடைய சூளாய்க் கிராமத்திற்கு அங்கு வாழ்ந்த சான்றோர்களால் எப்போதும் தனிப்பெருமை உண்டு. அந்த வரிசையில் நேர்மை, மக்கள் சேவை, இனப்பற்று ஆகிய பலதுறைகளில் மேம் பாடுற்று விளங்கியவர் மறைந்த பெரியார் திரு அ. கந்தசாமி ஆவார்.

நான் இளம் மாணவனுக கல்வி கற்ற காலத்திலேயே திரு, கந்தசாமி அவர்களை அறியும் வாய்ப்பைப் பெற்றேன். அவரின் சேவை மனப்பான்மையும், நடுவுநிலைமை, இனவிடுதலையில் வாஞ்சை என்பன என்னைப் பெரிதும் கவர்ந்தன.

அரசியலில் தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுப்பதிலும், தன்மானம் காப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். எமது கிராமத்தில் எமது இயக்கத்தின் முன்னணித் தொண்டராக விளங்கினர். அவருடைய ஆர்வம் அவர் குடும்பத்தினரிலும் பரவியது. முக்கியமாக அவருடைய செல்வக் குமாரர்கள் தயாபரன், முரளீதரன் இருவரும் இனத்தின் விடிவுக்காக சொல்லொணுத் துன்பங்களை அனுபவித்த போதும் கலங்காது மன மகிழ்ச்சியோடு அவர்களைப் போர்க் களம் அனுப்பி வைத்த வீரத் தந்தையாக திரு. கந்தசாமி விளங்கினர். இவ்விரு இளவேங்கைகளும் இன்று தமிழின விடுதலையின் முன்னணித் தலைவர்களாக இனத்தின் பாதுகாவலர்களாக விளங்குவதைக் கண்டு மகிழ்ந்தாராயினும், இனத்தின் விடிவைப் பெற்றுத் தரும் நாளைக் காண முடியாதபடி திரு. கந்தசாமி அவர்கள் யாரும் எதிர்பாராத நேரத்தில் எம்மை விட்டுப்பிரிந்தார். அவரின் பிரிவால் வாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் பிள்ளைகளுக்கும் குறிப்பாக தம்பிமார் சுதாகரன் கிருபாகரன் தங்கை சுகந்திக்கும் (சுமதி) சிறப்பாக வீர வேங்கைகளுக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

சீரிய வாழ்க்கை வாழ்ந்து இறைவன் அடி சேர்ந்த அமரர் திரு. கந்தசாமி அவர்கள் வழியில் நேர்மை, இனத்துக்கும் மக்களுக்கும் சேவை, இறைபணி ஆகிய துறைகளில் எம்மை அர்ப்பணித்து உழைப்பதே அவர் வாழ்விலிருந்து நாம் கற்க வேண்டிய பாடமாகும்.

அமரர் கந்தசாமி நாமம் வாழ்க!
அவரது ஆன்மா சாந்தி பெறுக!!
தமிழீழம் மலர்க!!!

இ. ந. விக்னராசா
சட்டத்தரணி
மூளாய் சமாதான சபைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் இதயம் நிறைந்தவர்
## அமரர் திரு அ. கந்தசாமி அவர்கள்

ஈழத்தில் உயிரொலியாம் இதயவொலிகேட்க
மானிப்பாய் மாதாவாம் மான்புடனே மடிசுமந்து
ஆயிரத்தி தொளாயிரத்து இருபத்தி ஏழின்
வழவிகொளிக்கும் மார்கழியாம் முப்பத்தி ஒன்றில்
மூத்தமிழைக் காத்திடவோர் முருகனாகி
இத்தரையில் வந்துதித்தார் கந்தசாமி
அப்புக்குட்டியொடு உயர்குணத்து உத்தமன்
அதிலும் உயர்வுடையாள் முத்துப்பிள்ளை
முதற்பெற்ற அண்ணனை நர்மலிங்கம்
அந்த அண்ணனுக்கோர் தம்பியானார் கந்தசாமி
படிப்பெல்லாம் துடிப்போடு முடித்துக்கொண்டார்
பட்டங்கள் பலபெற்று பதவிகொண்டார்
சுற்றத்தார் சூழவுள்ள பந்துக்களெல்லாம்
சுடர்இவரென்று சுற்றியே வாழ்ந்துவந்தார்
இத்தலைக்கும் மூத்தழகு மூளாயில் உண்டென்று
முன்புள்ளோர் சொல்வார்கள் கல்வியழகுகண்டு
அன்னாரின் கல்லூரி கடவுளுள்ள ஆலயம்தான்
அழகு ஆலயத்தின் மணிகூட ஆசிரியமணிகள்தான்
ஆசிரிய மணியாம் ஆசிரியர் கந்தையா
நாம் அம்மா எனஅழைக்கின்ற அன்னபூரணம் ஆசிரியை
இவர்களின் குடும்பமொரு பல்கலைக்களஞ்சியம்
களஞ்சியம் காத்திடவே கந்தசாமி வந்தார்
கந்தசாமி பொறுப்புள்ள களஞ்சியப்பொறுப்பாளர்
கண்ணியமாய் கயிலையினை நாயகியாய் கொண்டார்
கொண்டதனால் கோடிசெல்வம் பிள்ளைகளே என்பார்
அந்தச்செல்வத்துள் நால்வர் பெருமையுள்ள ஆண்கள்
யாழ்ப்பாணக்கல்லூரி இவர்களின் வீடு இவர்கள்
கால்பதித்த இடமெல்லாம் பொன்னாகும் நாடு
அழகுண்டு அறிவுண்டு ஆற்றலும் நிறையவுண்டு
ஆனாலும் நாட்டுக்கு விடிவுண்டா என்று
இடிகேட்கும் திசையெல்லாம் இவர்முகம்தெரியும்
தமிழ் விலங்கொடிக்க விரல்களிலே விசைவிளையாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரம்கொண்ட உளம்கொண்டு உதிரங்களேயும்
உயர்தியாகத்தின் சூழ்நிலைகள் இவர்கள் வீரர்களாகும்
ஆசைக்கு ஒருபிள்ளை பெண்பிள்ளை
அவன்பாசத்தைச் சுமந்துகொண்டே பவனிவந்தார்
பந்தபாசத்தை மதிப்பதிலும் பார்க்கநன்கு
தேசத்தை மதித்திடுவார் நேர்த்திகொண்டு
ஆற்றல் அவரிடத்தில் அதிகமுண்டு
ஆனாலும் அமைதியின் வடிவமேயன்றோ
வீட்டில் அவரிருக்கும் நேரத்திலெல்லாம்
விரும்பியே சென்றுநாம் பேசியதுண்டு
கடமை கண்ணியம் கட்டுப்பாடுதான்
இன்னமும் தன்குடும்பம் காக்கின்றதென்பார்
இடையிலே ஒருநாள் இரவுநேரத்தில்
இதயங்கள் அர்த்தமின்றி துடிக்கக்கேட்டேன்
விடிந்ததும் எழுந்தது சேதியொன்று அந்தகோ
வீரன்நீர் மடிந்து வீழ்ந்தீரென்று
ஓடினோம் கூடினோம் ஒப்பாரி சொன்னோம்
இப்பாரில் உமக்குயார் ஒப்பாவாரென்று
சுடுகாட்டில் சுட்டெரிக்கும் நேரத்தில் நின்றோம்
கடமை முடிந்துநீர் சென்றிடவே கண்டோம்
கண்கள் கலங்கின கைகள் துடித்தனவே
கல்லறையில் அடைத்துவைத்தால் கைகளினால்உடைத்தெடுப்போம்
கட்டையிலே அடுக்கிவிட்டார் அந்தபிடிமண்ணால் என்ன
செய்வோம்

அதனால் ஐயாவை இழந்து அருந்துயர் கொண்டிருக்கும்
உற்றர் உறவினர் சுற்றத்தார் சூழவுள்ள
பிள்ளைகள்யாவற்கும் பெருந்துயர் துடைத்திடவே
பிறந்தவர்யாவரும் இறப்பது நியதிதான்
ஆனாலும் ஐய்யா பேரோடு இறந்திட்டா பெறுத்திடுக என்று
ஆறுதல்கூறியே அமைகின்றேன்

"அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக"

சாந்தி! சாந்தி! சாந்தி!

இங்ஙனம்

மூளாய் செ. சிவசுப்பிரமணியம்
களஞ்சியப் பொறுப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதையும் தாங்கும் இதயம் கொண்ட
# உயர்ந்த மனிதன்!

சும்மா இருக்கின்ற சிலநல்ல மனிதரெல்லாம்
காலையிலே எழும்போது வீழ்ந்து கிடக்கின்றார்
என்னென்று கேட்டால் காற்றபின் என்கிறார்கள்
கண்கூட இல்லையோ அந்தக்காற்றபினுக்கு கைகட்டிக்
கேட்கிறோமே சும்மா!

சோமசுந்தரம் ஆசிரியர் சேமமெல்லாம் நாம்கேட்டால்
அவர் "ஆசிரியமணியன்றோ" சுந்தையா என்பார்கள்
என்றுமவர் அன்போடு அம்மாவும் கூடவே
மருமகனையும்" பெற்றவர்தான் கந்தசாமி கேளீர்!

கந்தசாமி ஒருநல்லமனிதர் எதையும் தாங்கும் இதயம்
கொண்டவர்
மானிப்பாய் பெற்றெடுத்த மறத்தமிழ் மாண்புடையோன்
மனையாளாய் கயிலையரைக் கைகளிலே பிடித்தகனும்
மூளாயின் முத்தெனவே மலர்ந்திட்ட வித்தகனார்!

கேளீர் இவர்ஒரு களஞ்சியத்தின் பொறுப்பாளர்
பொறுப்பிலே கடமையும் கண்ணியமும் காத்திட்டார்
காத்திடும் பொறுமையில் காந்தியையும் விஞ்சியே
கந்தசாமி வாழ்ந்திட்டு வானுலகம் சென்றிட்டார்!

சென்ற தினத்தன்று வந்தவரைப் பார்த்தோம்
அவர் மல்லாந்து கிடந்தபோது மயிர்க்கூச்செறிந்தது
மறத்தமிழைக் காத்திடவே அவர் மக்களைப்பெற்றார்
அந்த மார்பினுள்ளே என்னசெய்தாய் காற்றபினே. என்றோம்!

நாடிநாம் வரும்போது ஓடியே வந்திடுவார்
தன்மக்களின் நண்பரென்று மகுடமும் சூட்டிடுவார்
தேன்பாகும் தித்திப்பும் வேண்டவே வேண்டாம்
அவர் தேன்தமிழில் பேசுவார் அதுவொன்றேபோதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியின் ஓரத்தில் விரைந்து அவர் வருப்போது
விரல்பட்டு சருகுகூட வீழ்ந்து கிடுவதில்லை
சாந்தமும் அமைதியும் அவரிடமே உண்டு
அந்தஆளத்தால் பலரிதயம் ஆண்டதவர் உண்டு!

துயர்பட்ட தமிழருக்கு நீர்துடைக்கக் கண்ணின்
தஜாபரன் என்னுமோர் தனையனைத்தந்து
தியாகஉளம் படைத்து அவர் தியாகியுமானார்
தமிழரின் தந்தையற்கு அவர்ஒளி விளக்கன்றோ!

மூத்தான தமிழினுக்கோர் முரளிதரன்
அவன்முழுநாளும் வலக்கரமாய் ஈழம்காப்பவன்
வித்தகனைப் வீரன்தனைத் தந்ததாலே அந்த
உத்தமராம் கந்தசாமி அதிஉயரத்திலுள்ளார்!

மேற்திசை நாடுகளின் மேன்மை நன்று
அறிந்திங்கு ஓடிவா கிருபாகரன் சென்றான்
மீண்டிங்கு வந்து அப்பா எங்கென்று கேட்டால்
அங்கென்று சொல்லநீர் எங்குசென்றீர் செல்வீர்!

சுதா சுதாஎன்று சதாவும்நீர் கூப்பிடுவீர்
சுதாகரன் வந்துநின்றான் அப்போது என்னசொன்னீர்
என்செல்லப் பிள்ளைநீ சொல்லுக்கேட்டிடுவாய்
விதிஎன்னை அழைக்கிறது விரைகிறேன் என்றீரோ!

கடைக்குட்டி பெயர்சூட்ட சுமதியென்று பிறந்திட்டாள்
அப்பாவின் முகம்தேடி அங்குமிங்கும் ஓடுகிறான்
விதியொரு சுமைசெய்து சுமதியிடம் சேர்த்ததுவோ
பாசத்தைச் சுமந்தபடி பாவையிவள் வாடுகிறாள்!

கொள்கைக்காய் வாழுகின்ற பிள்ளைகளைப் பெற்றீர்
பெற்றதனால் தந்தையாய் தாயும்நீர் ஆனீர்
விதிசெய்த சதியினால் வீழ்ந்து மடிந்திட்டீர்
நாம்இனியொரு உயிர்செய்வோம் எம் இதயத்துள்நீர்வாழ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடிந்ததனுல் உம்முடம்பு சுட்டெரியக் கண்டோம்
எரிகின்ற நெருப்பிலொரு ஓசையெனக் கண்டோம் அந்த
ஓசையினும் ஈழம்தான் வெல்கவென்று கேட்டதுவோ
வீரைத்தந்த உடல் வீணுயும் எரியுமோ!

வீணுகப் போகாத விடிந்ததமிழ் ஈழம்வரும்
அந்தஈழத்தின் விண்ணிலோ மண்ணிலோ நீரிருந்தால்
தனைமீட்கத் தனையர்தந்த தந்தையிவன் தானென்று
அணையாத தீபமொன்றை அன்னைஉமதருகே ஏற்றிடுவாள்!

அதுவரை அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திப்போம!

சாந்தி! சாந்தி! சாந்தி!

இங்ஙனம்

மூளாய்
சுளிபுரம்

அன்னாரின் பிள்ளைகளின் நண்பர்கள்
சார்பில்
க. பாலச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புகள் பலநிறைந்தவர்

# அமரர் கந்தசாமி அவர்கள்

மாண்புமிகு மானிப்பாயில் 1927ம் ஆண்டு பெரியார் அப்பாக்குட்டியவர்களது அருந்தவப் புதல்வனாய் அவதரித்த உத்தமன் கந்தசாமியவர்கள், வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, அயிலேந்து கையன் பொற்பதம் அடைந்து இன்று 31வது தினம். கற்கவேண்டியவை யாவும் கற்று, ஏற்ற தொழில் நாடி, நெற்சந்தைப்படுத்தும் திணைக்களக் களஞ்சிய பொறுப்பாளராம் சீரியபணியைத் திறம்படச் செய்து, இல்லறம் என்னும் நல்லறம் நாடி, சீருந் திருவும் பொலியும் மூளாயம் பதியின், அன்பும் பண்பும் ஒருங்கமர் சோமசுந்தர உபாத்தியாருக்கும், எம்போன்ற பலருக்கு எண்ணும் எழுத்தும் அறிவித்து ஆளாக்கிய, திருமதி அன்னபூரணத்திற்கும் மருகராகும் மாண்பினைப் பெற்றார், செந்தாமரைச் செல்வியின் கடாட்சம் நிரம்பப் பெற்று, விழுப்பந்தரும் ஒழுக்கநெறியில் நின்று வீடும், சுற்றமும், அயலாரும் அன்னியரும் உவப்ப, உத்தமனாய் வாழ்ந்தவர் பெருந்தகை, அமரர் கந்தசாமியவர்கள். நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைய இவ்வுலகின் இயல்புக்கேற்ப மைந்தரும் கேளும், பதியும்கதறியழ, நண்பரும் அயலவரும் கலங்கிநிற்க, படைத்தவன் வாவென்றழைக்க நிலவுலாவிய நீர்மலி வேணியன் பாதாரவிந்தங்களை நண்ணிய மாண்புமிகு தியாகச் செம்மல், கந்தசாமியவர்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழும் தமிழுலகின் துயர்துடைக்கவல்ல இனப்பற்றும் சுதந்திர உணர்வும் மிக்க வீரக்குரிசில்களை எம் இனத்திற்களித்து அமரத்துவம் அடைந்துள்ளார். நன்றிமறவா நல்லுலகம் என்றென்றும் அவரைத் தம் இதயத்திருத்தும்.

அன்புமிக்க நண்பர், அமரர் கந்தசாமியவர்களது பரிசுத்த ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்லவனை இறைஞ்சுகின்றோம்.

மூளாய்
சுளிபுரம்

**நா. வேலுப்பிள்ளை அவர்கள்**
அதிபர், இந்துக் கல்லூரி வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Idol Late Mr. Kandasamy

Mr. A. Kandasamy was an employee of the Marketing Department of Chunnakam during my period as Asst Marketing Commissioner Northern Region He was first employed as a clerk and Later was appointed as store keeper under the guaranteed price scheme which was also a part of the Marketing Department He was stationed at Palaly G. P. stores Where I had the Opportunity to come in close contact with him as he come directly under my preview I also understand he functioned in this capacity at several stores outside the Northern Region Later he came into the Northern Region again and served at Nanaddan and Kilinochchi where he come again under my Preview.

He was an examploying officer discharging his duties to my entire Satisfaction I right to recall that he was put solely in Charge of the Palaly G P S. stores when the chief store keeper waa replaced for some disiplinary reason There again he Carried the whole weight on his shoulders and satisfied me as to his capablities and intergrity He was one of the few officers in the G. P. S. section who proved his ablity and honesty.

I heard from his brother Mr. A. Tharmalingam with sorrow that Mr. Kandasamy has passed away.

May God bless his Soul and guide his Family

**G. T. Stephen**
(Former Asst Marketing Commissioner)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைப் பெருவானில்

# ஒளிவிடும் தாரகை

திரு அப்பாக்குட்டி கந்தசாமி அவர்கள் மறைந்து விட்ட செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும் பெரும் கவலையும் அடைந்தேன். காரைநகர் அரசினர் அதிபர் ஆலையில் களஞ்சியப் பொறுப்பாளராக கிட்டத்தட்ட மூன்று வருடகாலம் அருஞ்சேவையாற்றிய பெருமகனார். இவர் களஞ்சியப் பொறுப்பாளராக இருந்த காலத்தில் நான் மூகாமை யாளராகப் பணியாற்றியதால் அன்னாரது நற்பண்புகளையும் திறமை களையும் நான் நேரடியாக அறிந்திருந்தேன். அமரர் அவர்கள் அமைதி யும் சாந்தமும் நிறைந்த புன்சிரிப்போடு பொலிந்த தோற்றமுடையவர் அன்பான உள்ளம் கொண்டவர். வஞ்சகம், போட்டி, பொறாமை தற்பெருமை என்ற தீய தன்மைகள் எதுவுமில்லாத குழந்தை மனம் கொண்ட பாராட்டத்தக்க பண்பாளன்

என்னுடன் சேவை புரிந்த களஞ்சியப் பொறுப்பாளர்களில் முதலிடம் அமரருக்கே சான்றும். காரணம் கடமை, நம்பிக்கை கண்ணிய வீரர். அமரர் முற்கோபமுடையவர். ஆனால் அதை மற்றவர் களுக்கு சொல்லாலேயோ காட்ட மாட்டார். அதைத் தன் முகத்தால் காட்டுவார்.

அமரர் பல சிங்கள இடங்களில் சேவை புரிந்தபோது அவரின் சாந்த குணத்தால் அவர்களை வென்றெடுத்து சுயமரியாதையுடன் தன் சேவையை நிகழ்த்தி தம்நாடு திரும்பினார் என்றது போற்றத்தக்கது.

அன்னாரின் ஆன்மா இறைவனடியில் நின்று சாந்திபெற இறைவனை இறஞ்சுவோமாக.

ஓம் சாந்தி!

14 சீனியர் ஒழுங்கை
யாழ்ப்பாணம்

இங்ஙனம்
து. சீனிவாசகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி

அமரத்துவம் அடைந்த - விசாகித்தம்பி — அப்பாக்குட்டி - கந்தசாமி

||

விசாகித்தம்பி — கற்பகம்

||

அப்பாக்குட்டி — பொன்னுப்பிள்ளை

||

தருமலிங்கம் - தங்கம்மா

||

மகேஸ்வரி
வசந்தராணி
தருமபாலன்
சாந்தினி

கந்தசாமி - கயிலைநாயகி

||

தயாபரன் முரளீதரன் கிருபாகரன் சுதாகரன் சுகந்தி (சுமதி)

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவு கேட்டு நேரில் வந்து மரணக் கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உதவி ஒத்தாசைகள் புரிந்த உற்ரூர், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது மனமுவர்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

"அஜந்தா"
மசவடி வீதி
மூளாய்

இங்ஙனம்
குடும்பத்தவர்கள்

திருமொழி அச்சகம், சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org